உ
சிவமயம்

# வாணி விழா சிறப்பு மலர்

**1982**



வடபிராந்திய போக்குவரத்துச் சபை

(தென் பகுதி)

சகல விதமான

★ சாய்ப்புச் சாமான்களும்

★ பலசரக்குச் சாமான்களும்

★ பேக்கரிக்குத் தேவையான எசன்ஸ், ஐக்கோ,

★ லிவர்ய், மாஜரீன், பட்டர் மற்றும்
நவதானியப் பொருட்களும்

சில்லறையாகவும் மொத்தாமகவும் பெற்றுக்கொள்ளக்

கிளிநொச்சியிற் சிறந்த ஸ்தாபனம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

# பால விநாயகர் ரேடேர்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

☎ 256

உ
சிவமயம்



# வாணி விழா

ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்.

**வட பிராந்திய போக்குவரத்துச் சபை**
**கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்**
**24 - 10 - 82**

# வாணி விழா இயக்குனர் சபை
# கிளிநொச்சி சாலை
## 1982

தலைவர்:- திரு.த. கந்தையா (சாலை முகாமையாளர் கிளிநொச்சி)
காரியதரிசி:- திரு.N.லோகநாதன் (சாலைப் பரிசோதகர் கிளிநொச்சி)
தனாதிகாரி :- திரு.P.தியாகராசா (சாலைப் பரிசோதகர் கிளிநொச்சி)
உபதனாதிகாரி:- திரு.ஜெ.தேவபாலன் (வினியோகப்பகுதி T.I கிளிநொச்சி)

## நிர்வாக சபை

திரு. K. சுகுணபாலயோகன் DOA கிளிநொச்சி
திரு. R.T. பொன்னுத்துரை DSA கிளிநொச்சி
திரு. K. மார்க்கண்டு சாரதி கிளிநொச்சி
திரு. S. தங்கராசா சாரதி கிளிநொச்சி
திரு. S.V. சிவநாதன், காப்பாளர், கிளிநொச்சி
திரு. N. கணபதிப்பிள்ளை மெக்கானிக் கிளிநொச்சி
திரு. P. பரலோகநாதன், ரிங்கர், கிளிநொச்சி
திரு. S. இராமச்சந்திரன் காப்பாளர், கிளிநொச்சி
திரு. N. குணரத்தினம் சாலைபரிசோதகர் கிளிநொச்சி

மலர் ஆசிரியர்கள்
திரு. ஜெ. தேவபாலன் (T. I. விநியோகப் பகுதி கிளிநொச்சி)
திரு. K. ஜீவகாருண்யம்(காப்பாளர் கிளிநொச்சி)



## கிளிநொச்சி
## பாராளுமன்ற உறுப்பினர்
## அவர்களின்

# ஆசிச் செய்தி

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரிவுகளாகிய மன்னூர், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு சாலைகளிலும் கடமையாற்றும் ஊழியர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் இப்பெரு விழாவையொட்டி வெளியிடப்படும் மலர் மூலமாக எனது ஆசியை வெளியிடும் வாய்ப்பினைத் தந்தமைக்கு சகல ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல காலமாக இவ்விழா தனித்தனியே சம்பந்தப்பட்ட சாலைகளில் மட்டும் நடைபெறுவதை நானறிவேன். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக இவ்வொருங்கிணைந்த விழா முறையே வவுனியா, மன்னூர், முல்லைத்தீவு ஆகிய சாலைகளில் நடைபெற்று நான்காவது விழா கிளிநொச்சிச் சாலையில் நடைபெறுகின்றது. மூன்று மாவட்ட சாலைகளுடன் கிளிநொச்சிச் சாலையையும் இணைத்ததன் மூலம் கிளிநொச்சியின் தனித்துவத்தை ஊழியர்கள் உணர்ந்து செயற்படுகிறார்கள் என்பது வெளிப்படை.

தொழிலாளிகள் இன, மத வேறுபாடின்றி இத்தகைய விழாக்களை மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களுக்கும் முக்கியமான விழாக்களை ஒன்று சேர்ந்து கொண்டாடிய வரலாற்றை நாம் அறிவோம். இது தொழிலாளர் மத்தியில் நல்லுறவை வளர்க்கப் பெரிதும் உதவியுள்ளது.

ஊழியர்களின் இம் முயற்சியைப் பாராட்டும் அதேவேளையில் ஊழியர்கள் மத்தியில் நல்லுறவு வளரவும் விழா சிறப்புற நிறைவு பெறவும் வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
அன்பன்,
வீ. ஆனந்தசங்கரி

கிளிநொச்சி
18 - 10 - 82

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின்
கிளிநொச்சிச் சாலையினர் நடாத்தும்

வாணி விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

# விஞ்ஞானக் கல்வி நிலையம்

கரடிப் போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

பதிவு இல :- 12782

**5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம்**

**G. C. E. (O.L) DEC. 1982**

**G. C. E. (A.L) 1983, 1984**

வகுப்புகளுக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களும்
பேச்சு ஆங்கிலம், தட்டச்சு,சுருக்கெழுத்து என்பனவும்
திறமையும், அனுபவமும் மிக்க பட்டதாரி
ஆசிரியர்களாலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்
களாலும் போதிக்கப் படுகின்றன.

விபரங்கட்கு:-

நிர்வாகி

**விஞ்ஞானக் கல்வி நிலையம்**

கரடிப் போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

## கிளிநொச்சிப் பகுதி உதவி அரசாங்க அதிபர் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி



உலகிலே தோன்றிய மானிடர்கள் யாவர்க்கும் இன்றியமையாதன வாகத் திகழ்வன கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றுமே. இவற்றில் ஒன்று குறைந்தாற்கூட மனிதன் மனிதனாகத் திகழ்வது கடினம். எனவே தான் இம் மூன்றையும் பெறுவதற்கு உரிய தெய்வங்களைப் பிரார்த்திப்பதற் கென ஆண்டிற்கு ஒன்பது தினங்கள் இந்து மதத்தினரால் ஒதுக்கப் பட்டுள்ளன. இதுவே நவராத்திரியாக நாடெங்கும் விரதமனுஸ்டிக்கப் பட்டுக் கொண்டாடப் படுகின்றது.

எனவே இப்படிப்பட்ட புனிதமான தினங்களில் மூன்று தேவியரை யும் வழிபட்டு கல்வி, செல்வம், வீரம் என்பவற்றை ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் நிலையாகப் பெறவும் அத்துடன் எமது கலை, கலாச்சாரம் என்பவற்றைப் போற்றிப் பேணவும் எமது கிளிநொச்சி போக்கு வரத்துச் சபையினர் இவ் வருடம் நவராத்திரி விழாவைக் கொண் டாடுவதனையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவர்கள் மற்றவர்களுக் கெல்லாம் ஒரு முன் மாதிரியாகத் திகழ்வது போற்றுதற் குரியது. இவர் களைப் போல் ஏனைய துறைகளில் உள்ளவர்களும் இப்படிப்பட்ட புனித மான செயல்களில் ஈடுபட்டால் நாடு வளமடையுமெனக் கருதுகிறேன்,

மேலும் இவர்களது புனிதமான முயற்சியினைப் போற்றுவதோடு எனது நல்லாசிகளையுந் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிளிநொச்சி.
24 - 10 - 82

க. சுப்பிரமணியம்

விவசாயப் பெருமக்களே !

உங்கள் உற்பத்திப் பொருட்களான நெல், மிளகாய்,
கச்சான், உழுந்து இன்னோரன்ன பொருட்களை
கூடிய விலை கொடுத்து, சரியான
நிறையில் கொள்வனவு
செய்பவர்கள்

கிளிநொச்சியில்

# ★நடராசா றேடேர்ஸ்★

## கண்டி வீதி, :: கிளிநொச்சி.

---

## எங்களிடம்:

★ பசளை
★ கிருமிநாசினி
★ ஸ்ப்பிறேயர்
★ நீர் இறைக்கும் இயந்திரம்

மற்றும்
A. பவர் கொம்பனிப்
பொருட்களும் குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## S. நாகமுத்து றேடேர்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

உங்கள் வாணி விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

சிறந்த பிடவைத் தினிசுகளுக்கு
நாடவேண்டிய இடம்

V

## லக்கி ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி,
கிளிநொச்சி.



## வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் / தகவுடை அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தென்னகச் சாலைகள் யாவும் ஒன்றிணைந்து வருடாவருடம் சிறப்பாக நடாத்துகின்ற வாணி விழாவுக்கு எனது வாழ்த்துச் செய்தியை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர்/தகவுடை அதிகாரி என்ற முறையில் அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். கல்விக்கரசிக்கு, கலைவாணிக்கு, சகலகலாவல்லிக்குத் தென்னகச் சாலைகள் ஒன்றிணைந்து விழா எடுத்துச் சிறப்பிப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

வீரத்தின் தெய்வமான துர்க்காதேவிக்கும், செல்வத்தின் தெய்வமான மகா லட்சுமிக்கும், கல்வியின் தெய்வமான சரஸ்வதிககும் விழா எடுத்துக் கொண்டாடுவதே நவராத்திரி விழாவாகும். எமது வாழ்வில் வீரம், செல்வம், கல்வி இம் மூன்றும் அதி முக்கிய இடத்தைவகிக்கின்றன. வீரம் இல்லாமல் செல்வத்தினுலும், செல்வம் இல்லாமல் வீரத்தினுலும், இவைஇரண்டும் இருந்தும் கல்வி இல்லையாயின் வாழ்வு சிறப்பாக அமைய மாட்டாதென்பது புலனுகிறது. எனவேதான், நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவிக்கும், அடுத்த மூன்று நாட்களும் மகாலட்சுமிக்கும், இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதிக்கும் ஒதுக்கப்பட்டுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்திலே எமது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் தென்னகச்சாலை ஊழியர்கள் ஒன்றிணைந்து விழா எடுப்பதனுல், வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பெற்று, வீரஉணர்வுடனும், செல்வச் செழிப்புடனும் கல்விமான்களாகவும் திகழ்ந்து தத்தம் கடமைகளைத் திறம்படச் செய்யவேண்டும் என்பதே எனது பேரவாவாகும். இதனுல் எமது சபை வளர்ச்சியுற்று எமது மக்களுக்கு ஓர் அதியுன்னத போக்குவரத்துச் சேவையைச் செய்கின்ற வாய்ப்பினை நாம் பெறுகின்றபோது எமது உள்ளம் பூரிப்பெய்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே, தங்களது வாணிவிழா சிறப்புறவும், எமது ஊழியர்கள் வாழ்வு மலரவும், எல்லாம் வல்ல சகலகலாவல்லி அருள்பாலிப்பாளாகுக.

165, 4ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
1982.10.18

சி. கனகரத்தினம்
தலைவர்
வட பிராந்திய போக்குவரத்துச் சபை.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின்

பிரதான பொறியியலாளர் (பராமரிப்பு)

# திரு. T. நவரத்தினம் அவர்களின்

# ஆசிச் செய்தி

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் தென்பகுதி சாலைகள் ஒன்றிணைந்து கிளிநொச்சிச் சாலையில் சமய பேதமற்ற முறையில் நடத்தும் வாணி விழாவிற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். வீரத்தை வழங்கும் துர்க்கைக்கும், செல்வத்தை அருளும் லட்சுமிக்கும், கல்வியை அளிக்கும் சரஸ்வதிக்கும் மும்மூன்று நாட்களாக ஒன்பது நாட்கள் விரதமிருந்து நவராத்திரி பூர்த்தி விழாவைக் கொண்டாடி வருகின்றுர்கள் நம் இந்துப் பெருமக்கள்.

தென்பகுதி சாலைகள் ஒன்றிணைந்து நடாத்தும் வாணி விழாவின் நிறைவு விழாவுக்கு எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

கல்வி - செல்வம் - வீரம் ஆகியவற்றை வழங்கும் ஆதிபராசக்தி இப்பகுதிச்சாலைகளில் கடமை புரியும் ஊழியர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் அருளவேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

T. நவரத்தினம்

## வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை

# பொது முகாமையாளரின்
# ஆசிச் செய்தி

கல்வி, செல்வம், வீரம் மூன்றும் ஒருங்கே பெற்றவன் முழுமனிதன் ஆகின்றான். இதன் முக்கியத்துவம், சிறப்பு ஆகியவற்றை உணர்ந்து சைவப் பெருமக்களால் நாடெங்கும் நவராத்திரி விழா வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. முதல் மூன்று தினங்கள் வீரத்திற்கும், அடுத்த மூன்று தினங்கள் செல்வத்திற்கும், கடைசி மூன்று தினங்கள் கல்விக்கும் விரதம் அனுஷ்டித்து பெருவிழாவாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

பொதுப் பயனளிக்கும் போக்குவரத்துச் சேவையில் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்துவரும் எமது சபைத் தென்பகுதிச் சாலைகளைச் சேர்ந்த ஊழியர்களும் வருடந்தோறும் இவ்விழாவை சிறப்புறக் கொண்டாடி வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வருடந்தோறும் சாலைகளில் கொண்டாடப்பட்டுவந்த இவ் விழாவை தென்பகுதிச் சாலைகள் அனைத்தும் ஒன்றிணைந்து முதலில் வவுனியாவிலும், பின்னர் மன்னார், முல்லைத்தீவிலும், இவ்வருடம் கிளிநொச்சிச் சாலையிலும் கொண்டாடி வருகிறார்கள். கிளிநொச்சிச் சாலையில் நடைபெறவிருக்கும் வாணிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு நான் இவ் ஆசிச் செய்தியை வெளியிடுவதில் பெருமையடைகிறேன்.

இவ்விழா சிறப்புற எனது பாராட்டுதல்களும், வாழ்த்துக்களும் உரித்தாகுக!

சிறப்பான பொறுப்புமிக்க சேவையைப் பொதுமக்களுக்கு அளித்து வரும் எமது சபைத் தென்பகுதிச் சாலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரும் சகல வழிகளிலும் நாடும், ஏடும், நற்றமிழர் வீடும் போற்றிப் புகழ்ந்து வாழ, எல்லாம் வல்ல சக்தியின் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

**இ. இராஜேந்திரன்**
*பொது முகாமையாளர்*

வாணி விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

இங்கு சகலவிதமான
ஆங்கில வைத்திய மருந்துகளும்,
வளர்ப்பு மிருகங்களுக்கான
மருந்து வகைகளும்
சகாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்

## குமரன் பார்மசி

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

தேசிய அடையாள அட்டைப்படம்,
கடவுச் சீட்டுப் படம், கலர் படம்
மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்
புக்களை நவீன முறையில்
எடுப்பதற்கு

## தங்கா போட்டோ ஸ்ரூடியோ

புகையிரதநிலைய வீதி, கிளிநொச்சி.

வாணி விழா சிறப்புற எமது நல் வாழ்த்துக்கள்

(வண்ணச் சாறிகளின் வசந்த மாளிகை)

நவநாகரீக நங்கையர் விரும்பும் சாறி வகைகளும், உயர்ரக சேட்டிங், சூட்டிங், மற்றும் சிறுவர் சிறுமியர்க்கேற்ற தயாரித்த உடுப்புகளுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# சாறி எம்போறியம்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

கிளிநொச்சி.

பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர்

சமாதான நீதிபதி,

## திரு. இ. கிருஷ்ணராசா அவர்களின்

# ஆசிச் செய்தி



இலங்கைப் போக்குவரத்து சபையின் மன்னார் வவுனியா முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய சாலைகளின் ஒன்றிணைந்த வாணி விழா இவ்வாண்டு கிளிநொச்சியில் நடைபெறுவது பாராட்டுக்குரியதாகும்.

நான்கு சாலைகளினது உத்தியோகத்தர்களும், தொழிலாளர்களும் மத வேறுபாடின்றி ஒன்றிணைந்து இவ்விழாவினைக் கொண்டாடுவது சமுதாய மறுமலர்ச்சிக்கு மேலும் மெருகூட்டுவதாகும்.

இதே போன்று ஏனைய சமயங்களின் முக்கிய விழாக்களை இந்நிறுவனங்கள் சிறப்பாக நடத்தியதும் பெருமைக்குரியது.

ஒரு குடும்பம் போல் இச்சாலைகளில் வேலை செய்பவர்கள் அனைவரும் இயங்குவதற்கும், பொதுமக்களின் சேவைக்கு ஏற்ற வகையில் தங்கள் கடமைகளை நிறைவு செய்வதற்கும் இத்தகு விழாக்கள் எடுப்பது பொருத்தமானதும் போற்றப்பட வேண்டியதுமாகும்.

கிளிநொச்சித் தொகுதியின் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் என்ற முறையில் என்னிடம் இம்மலருக்கு ஆசிச் செய்தி கேட்டுக் கிளிநொச்சி மக்களை கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்து வாணியின் அருள் பெற்று அனைவரும் உயர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள

இ. கிருஷ்ணராசா

வாணிவிழா வெற்றிபெற எமது வாழ்த்துக்கள்

உருசியான சிற்றுண்டி வகைகள்!

தரமான தேநீர்!

அதிசிறந்த குளிர்பான வகைகள்!

யானை மார்க் சோடா!

சூடான கோப்பி!

சர்பத், பசன் புறுட் போன்ற குளிர்பான வகைகளும், மலிபன் விஸ்கட், கேக் சிற்றுண்டி வகைகளும், சாய்ப்புச்சாமான்களும் நாவல்கள், சஞ்சிகைகள் போன்றவைகளும்.

குறைந்த விலையில்
சிறந்த உபசரிப்புடன் பெறுவதற்கு
தாமதமின்றி நாடுங்கள்

# சாரதா

## கூல் அன் கோப்பி (B) பார்

புதிய பஸ் நிலையம், : : கிளிநொச்சி.



## கிளிநொச்சி பொறியியல் அதிகாரியின் ஆசிச் செய்தி

## வே. மகேஸ்வரன்

பொறியியல் அதிகாரி

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தென்பகுதியினர் நடாத்தும் நான்காவது வாணிவிழா இம்முறை கிளிநொச்சிச் சாலை ஊழியர்கள் ஊக்கத்தினால் கிளிநொச்சிச்சாலையில் நடைபெறவுள்ளது.

எமது சாலையில், எமது பொறியியற் தொழிலைச் செய்வதற்கு எவ்வளவோ வசதிகள் குறைவாக இருந்தும், அதனைப் பொருட்படுத்தாது, பொறியியல் ஊழியர்கள் ஊக்கத்துடன், பொதுசனப் போக்குவரத்துச் சேவையைத் திறம்பட நடாத்துவதற்கு, பொறியியற் தொழிலினைச் செவ்வனே செய்வதற்கு எல்லாம் வல்ல வாணி தனது அருட் கண்களைத் திறந்து அருள்பாலிக்க வேண்டும்.

★ ★ ★

இ. போ. ச. ஊழியர்

## திரு. செ. தங்கராசா அவர்களின் நல்லாசி

இவ்வாண்டு கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியாச் சாலைகள் ஒன்றிணைந்து நடத்தும் வாணி விழாவில் கிளிநொச்சிச்சாலையின் பஸ் சாரதியாகக் கடமை புரியும் என்னை இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்கக் கோரித் தொழிலாளர்களைக் கௌரவித்த பெருமைக்கு நன்றிகூறக் கடமைப்பட்டடுள்ளேன்

தொழிலாளர்களின் மத்தியில் சமயவேறுபாடின்றி ஒற்றுமையாக இருப்பதற்கு இப்படியான விழாக்கள் வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாணி விழா போன்று ஏனைய சமய விழாக்களையும் நாம் கடந்த காலத்தில் கொண்டாடியுள்ளோம். வருங்காலத்திலும் கொண்டாடுவோம் என்று உறுதிபூண்டுள்ளோம்.

வாழ்க தொழிலாளர் வர்க்கம். வளர்க நமது ஒற்றுமை.

செ. தங்கராசா

# Agricola Engineers

Sales, Service and Manufacturers
of
Agricultural Implements

**Specialists in winnowing Fan Manufacture.**

**Prop : *M. Sritharan***
Kandy Road, KILINOCHCHI.

அக்கிறிகோலா என்ஜினியேர்ஸ்
( சிறி கராச் )

புதிய முறையில் நெல் தூற்றும் காற்றுடி தயாரிப்பாளர்கள்
மற்றும்
கடைச்சல், வெல்டிங் முதலிய வேலைகளுடன்
மோட்டார் வாகனங்களையும் சிறந்த முறையில்
பழுது பார்த்துக் கொடுப்பவர்கள்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

அக்கிறிகோலா என்ஜினியேர்ஸ்

## வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை
## செயலாற்று முகாமையாளரின்
# ஆசிச் செய்தி

வருடா வருடம் தென்பகுதி சாலேகளான மன்னர், முல்லேத்தீவு, கிளிநொச்சி வவுனியா சாலேகளனேத்தும் ஒன்றிணேந்து நடாத்தும் வாணிவிழா இவ்வருடம் கிளிநொச்சி சாலேயில் சிறப்பாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வீரத்தின் தெய்வமான துர்க்கா தேவிக்கும், செல்வத்தின் தெய்வமான லட்சுமிக்கும், கல்விக்கதிபதியாக விளங்கும் கலேவாணிக்கும், எமது தென்பகுதிச்சாலே ஊழியர்களும், அலுவலக ஊழியர்களும் மிகப் பிரமாண்டமான முறையில் விழா எடுத்து கொண்டாடி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான்காவது வருடத்தில் கிளிநொச்சி சாலேயில் கொண்டாடப்படும் வாணி விழா சிறப்பு விழாவாக அமைந்து ஊழியர்கள் மத்தியில் புதுப்பொலிவையும், செல்வத்தையும், கல்வியையும் அளித்து சேவை உணர்வுடன் தங்கள் கடமைகளே செவ்வனவே ஆற்றுவதற்கு எல்லாம் வல்ல சகலகலாவல்லி அருள்பாலிப்பாளாக.

165, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

க. மயில்வாகனம்
செயலாற்று முகாமையாளர்

§§§ §§§ §§§

## வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை
## பிராந்தியக் கணக்காளரின்
# ஆசிச் செய்தி

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை தென்பகுதிச் சாலேகளேச் சேர்ந்த ஊழியர்கள் அனேவரும் ஒருமித்து, இவ்வருடம் கிளிநொச்சிச் சாலேயில் நடத்தவிருக்கும் மாபெரும் வாணிவிழாவை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

உலகெங்கும் பரந்து வாழும் இந்துசமயப் பெருமக்களால் வருடந்தோறும் நவராத்திரி விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஏனைய சமயங்களேச் சேர்ந்த மக்களும் இவ்விழாக்களிலே கலந்து கொண்டு சிறப்பிப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தவகையில் எமது சபையின் தென்பகுதிச் சாலேகளின் ஊழியர்கள் அனேவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி வருடந்தோறும் இவ்ழாவை மிகவும் சிறப்புற நடாத்துவதைக் கண்ணுற்றும், கேட்டும் உண்மையில் நான் மனம் பூரித்ததுண்டு.

''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற நோக்கே, பெருநோக்காக கொண்டு பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையை, தொண்டினே ஆற்றிவரும் தென்பகுதிச் சாலேகளேச் சேர்ந்த ஊழியர்கள் அனேவரும் கல்வி, செல்வம், வீரம் ஆகியன ஒருங்கே பெற்றுச் சிறப்புடன் வாழ, சகலகலாவல்லியின் நல்லருள் கிடைக்க வேண்டுமென நான் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

**இவ்விழா சிறப்புற என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!**

இங்ஙனம்
ந. சிவசுப்பிரமணியம்
வ. பி. போ. சபை

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலையினரால் நடாத்தப்படும் வாணி விழா சிறப்புற
எமது நல்லாசிகள்

திறமான மா, அரிசி, தூள் போன்ற பொருட்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

# ஈஸ்வரன் மில்ஸ்

கண்டி வீதி,
கிளிநொச்சி.



உ

கிளிநொச்சிச்சாலை முகாமையாளர்

## திரு. த. கந்தையா அவர்களின்

# ஆசிச் செய்தி

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைச் சக்தியாகக் கண்டு வழிபட்டவர் தமிழர். ''எங்கெங்கு காணினும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ண மடா'' என்று சக்தியின் வியாபகத்தை விளக்குகிறார் பாரதிதாசன். சக்தியை வீரசக் தியாய், செல்வசக்தியாய், வித்யா சக்தியாய் வழிபடுகிறோம். மனித வாழ்விற்கு இன் றியமையாத இம் முச்சக்திகளும் தமக்கு வாய்க்க வேண்டும் என்று அவற்றின் தெய் வங்களை வேண்டுதல் செய்யும் தினங்களே நவராத்திரியாகும். முதல் மூன்று தினங்க ளும் வீரத்தெய்வமாகிய அருட் சக்தியாகிய துர்க்கையையும் அடுத்து மூன்று தினங்கள் செல்வத்துக்கு உரிய தெய்வமாகிய இலக்குமி தேவியையும், இறுதி மூன்று தினங்கள் வித்தைக்கதிபதியாகிய சரஸ்வதி தேவியையும் வழிபடுகிறோம்.

நாடிப்புலங்கள் உழுவார் கரமும், நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும், செழுங்கருணை ஓடிப் பெருக்கும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம் ஆடிக் களிக்கும் மயிலாகிய வாணிக்கு எமது வட பிராந்திய போக்குவரத்துச் சபை தென் பகுதிச் சாலைகள் ஒன்றிணைந்து விழாவெடுப்பது சாலப் பொருத்தமானது.

''ஆயபல தொழிலெடுக்க ஆற்றல் தருவது நீ
அதனால் என் செய் கருமம் அனைத்தூரும் அடியேன்
தூயநிலை துலக்கிடவே துணிந்திடுவேன் எவர்க்கும்
சொல்லரிய பரம்பொருளே சுயஞ்சோதிப் பொருளே''

என்று பல்தொழில்களும் பரம்பொருளின் ஆக்கமே எனக் கவிமணி கூறுகிறார். இந்த வகையிலே தொழிற் கூடங்களாக, மக்கள் பணி புரியும் சேவைக் களங்களாக விளங்கும் போக்குவரத்துச் சபை ஒன்றிணைந்து வாணிக்கு விழாவெடுப்பது பல்லாற் றானும் உகந்ததே. வட பிராந்திய தென்பகுதிச் சாலைகளாகிய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிச் சாலைகள் கடந்த வருடங்களில் விழாவெடுத்து இறுதியாக கிளிநொச்சிச் சாலையின் முதன்மையில் தென்பகுதிச் சாலைகள்இணைந்து வாணிக்கு விழா வெடுக்கிறார்கள்.

இவ்விழா ஒரு பெருவிழாவாக, திருவிழாவாக அமைய எல்லாம் வல்ல வாணியின் அருள் வேண்டி அமைகிறேன்.

வாழ்க தமிழினம், வளர்க பக்திநெறி.

இங்ஙனம்
த. கந்தையா

வாணி விழா சிறப்புற எமது நல்லாசிகள்

குறித்த தவணையில் நெல் உடைத்தும்,

மாவு, தூள் அரைத்தும் கொடுப்பதற்கு

கிளிநொச்சியில் சிறந்த ஸ்தாபனம்

# கிறவுண் மில்ஸ்

எமேசன் வீதி, :: கிளிநொச்சி

---

கிளிநொச்சியில்

விதம் விதமான கறுப்பு வெள்ளை, வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள், அன்ரனுக்கள், வானொலிப் பெட்டிகள் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும்,

**T. V** க்களை, வீடியோ றைக்கோடர்களை பயிற்சி பெற்ற வல்லுனர்களைக் கொண்டு உடனுக்குடன் பழுது பார்த்துக் கொள்ளவும்,

நம்பிக்கையான ஸ்தாபனம்

# பரம் ஏஜன்சி

122, கண்டி வீதி, :: கிளிநொச்சி

தொலைபேசி ! 329



# சக்தி வழிபாடும் கிளிநொச்சிச்சாலையும்

உலகத்தில் முதன் முதலில் தோன்றியதும் மகிமை பொருந்தியதும் சக்தி வழிபாடாகும். பழந்தமிழ் நாகரீக வரலாற்றை மொஹஞ்சதாரோ - ஹரப்பா ஆகிய இடங்களில் ஆராய்ச்சி மூலம் அறியப்புகுந்த வரலாற்று அறிஞர்கள் முதன் முதலில் பெண் உருவங்களை அந்தக்காலத்து மக்கள் வழிபட்டதைச் சிறு சிறு உருவங்களிற் கண்டுபிடித்துள்ளனர். சதா ஞான நிஷ்டையில் இருக்கும் பரமசிவனுக்கு உலகத் துன்பங்களை எல்லாம் எடுத்துச் சொல்பவள் அன்னை பராசக்திதான். தான் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் கங்காதேவியை பரமசிவன் சடாமுடியில் வைத்திருக்கிறார்.

எமது பழந்தமிழ் இலக்கிய நூல்களெல்லாம் அன்னையையே முதன்மைப்படுத்திப் பாடியுள்ளனர், ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்று ஔவைப்பிராட்டி கூறியுள்ளதை நாமறிவோம். உலகத்துக்கு எவருமே அளித்திராத தெய்வத்தமிழ் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் கூடத் தமது முதற் குறளை-

அகர முதல எழுத்தெல்லாம் - ஆதிபகவன்
முதற்றே உலகு.

என்று புனைந்துள்ளார். ஆதி என்பது பெண்பாலைக் குறிக்கும் சொல். இன்று உலகில் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்ற திருக்குறள்கூடத் தாயைப் பெருமைப்படுத்தித் தொடங்கியுள்ளது.

சகலவல்லமையும் பொருந்தி உலகைக் காப்பவள் அன்னை பராசக்தி. அதனாற்தான் அவளுக்குப் புவனேஸ்வரி என்ற நாமமும் வழங்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் வாழ்ந்த ''அபிராமிப்பட்டர்'' என்ற அந்தணருக்காக அமாவாசை நள்ளிரவு வேளையில் சந்திரனை உதிக்கச்செய்து பக்தனைக் காத்தாள். அன்னத்தைக் குறைவில்லாது வழங்குகிறபடியால் ''அன்னபூரணி'' என்ற நாமமும் அவளுக்கு உண்டு. இந்தியாவிலே அருள் சக்தியை அள்ளி வழங்கும் திருத்தலங்களாக புவனேஸ்வரி கோயில், திருவேற்காடு கருமாரியம்மன் கோயில், காஞ்சிக் காமாட்சியம்மன் கோயில், காசி விசாலாட்சியம்மன் கோயில் என்பன விளங்குகின்றன. இலங்கையிலே நயினை நாகபூசணி அம்மன் கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில், உடப்பு திரௌபதியம்மன் கோயில், வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் என்பன அவள் அருள்பாலிக்கும் திருத்தலங்களாக விளங்குகுன்றன.

''சக்தி இருந்தால் செய் அல்லது சிவனே என்று இரு'' என்ற பழமொழி இன்றும் நம்மிடையே வழங்கப்படுகிறது. பராசக்தியின் சக்தி இருந்தாற்தான் எதையும் செய்யமுடியும். அல்லது சிவனே என்று இருக்கவேண்டியதுதான். ''மகிடாசுரன்'' என்ற அசுரன் செய்த தவத்தால் முழுவரங்களையும் வழங்கிவிட்டார் சிவபெருமான். அவனுடை அட்டூளியங்களைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அந்த அரக்கனை அழிக்க என்னால் முடியாது. சகல சக்திகளும் பொருந்திய பராசக்தியாற்தான் அது முடியும் என்று சிவபெருமானே சொல்லிவிட்டார். தேவர்கள் அன்னை பராசக்தியை நினைந்து தவமிருந்தனர். அன்னை பராசக்தி தேவர்கள் தவத்துக்கிரங்கி மகிடாசுரனை அழித்தாள்.

கருணைக்கடலான அன்னையின் அருள் பெற்ற ''தட்சணேஸ்வரத்து'' ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச சுவாமிகளின் சீடன் சுவாமி விவேகானந்தர் அமரிக்காவில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் இந்துசமயத்தின் பெருமையை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டினார். காமாட்சி அருள்பெற்ற காஞ்சிக் காமகோடி பீடம், பெரியவர் சந்திர சேகர சுவாமிகள் மூலம் அன்னை பராசக்தியின் பெருமைகளை உலகத்துக்கு எடுத்துக் காட்டிக் கொண்டு வருகின்றது.

புரட்சிக் கவிஞர் பாரதியார் கூட,

''எங்கெங்கும் காணினும் சக்தியடா'' - என்றும்,

ஓம்சக்தி சக்தி சக்தி என்றே சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் வந்தால் இரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்
தண்ணருளென்றே மனது தேறு.

என்று பாடியுள்ளார்.

கிளிநொச்சிச் சாலைக்கும் சக்தி வழிபாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு பழங் காலந்தொட்டே இருந்து வருகிறது. கண்டிவீதியிற் பிரதான அபிவிருத்திப் பகுதியில் அமைந்துள்ளது எமது கிளிநொச்சிச்சாலை. உழுது பயிரிடும் மக்கள் இங்கு வாழ்ந்து வருவதால் அவர்கள் ஆண்டுதோறும் அம்மனுக்கோ அல்லது நாகதம்பிரானுக்கோ பொங்கி வழிபட்டு வருகின்றனர். வருடாவருடம் நடைபெறும் இந்தவிழா ''பொங்கல் குளிர்த்தி விழா என்று அழைக்கப்படுகிறது.

''மக்கள் சேவை மகேசன் சேவை'' என்பார்கள். மக்களுக்குச் செய்கின்ற சேவை மகேசனை கடவுளுக்குச் செய்கின்ற சேவையாகும். கிளிநொச்சிச்சாலை ஊழியர்களாகிய நாம் அண்டுதோறும் நடைபெறும் கனகாம்பிகையம்மன் கோயிற் பொங்கல் குளிர்த்தி விழாவிற்குச் சிறந்த பஸ் சேவைகளை அளித்து வருகின்றோம். மேலும் மாங்குளத்தையடுத்து துணுக்காய்ப் பாதையில் அமைந்துள்ள வன்னிவிளாங்குளம் முத்து மாரியம்மன் கோயிலில் நடைபெறும் பொங்கல் குளிர்த்தி விழாவுக்கு ஒவ்வொரு வருடமும் சிறந்த பஸ் சேவைகளை வழங்கி வருகின்றோம். கதிர்காம யாத்திரை செல்லும் பக்தர்கள் வன்னிவிழாங்குளம் - வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கலில் கலந்து கொண்ட பின்பே கதிர்காம யாத்திரையைத் தொடங்குவார்கள். வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில் பொங்கல் குளிர்த்தி விழாவின்போதும் எமது சாலையைச் சேர்ந்த பஸ்களும், ஊழியர்களும் கிளிநொச்சியிலிருந்து அங்கு செல்லும் பக்தர்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவையை அளித்து வருகின்றோம்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த மக்கள் அதிகமாகக் கிளிநொச்சிப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் குலதெய்வம் நயினை நாகபூசணியம்மன். வருடந்தோறும் நடைபெறும் தேர், தீர்த்த, பூங்காவனத் திருவிழாக்களுக்கு கிளிநொச்சியிலிருந்து குறிகட்டுவானுக்கு விசேட சேவைகளை வழங்கி வருகின்றோம். நாள்தோறும் காலை பிற்பகல் இரண்டு பஸ் சேவைகள் நயினாதீவு செல்லும் பக்தர்களுக்காகவும் நெடுந்தீவு செல்லும் மக்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு வாழும் மலைநாட்டு மக்கள் சார்பாகவும் மாத்தளை மாநகரிலிருந்து அருள் பாலிக்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிற் தேர், தீர்த்தப், பூங்காவனத் திருவிழாவிற்குப், பக்தர்களுக்காக விசேட சேவைகளை நடத்தி வருகின்றோம் இப்படியாகச் சக்தி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புகளை நாம் பெற்றுள்ளோம். நாகதம்பிரான் கோயில்களான புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில், புத்தூர் நாகதம்பிரான் கோயில் ஆகிய இரண்டுக்கும் பொங்கல். குளிர்த்தி தினங்களில் மேலதிக பஸ் சேவைகளை ஏற்படுத்தி செயலாற்றி வருகின்றோம்.

வடபிராந்தியப் போக்குவரந்துச் சபையின் தென்பகுதிப் போக்குவரத்துச் சாலைகளின் வாணிவிழா முறையே வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய சாலைகளில் நடைபெற்று நிறைவு விழாவாக எமது கிளிநொச்கிச் சாலையில் நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இந்த நல்ல சமயத்தில் இந்த விழாக்களுக்கு மூல கர்த்தாவாக இருந்த திரு. நா. தியாகரா (முன்னாள் தென்பகுதி முகாமையாளர்) அவர்களைக் கௌரவிப்பது நமது நன்றிக்கடனாகும்.

''சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்
தண்ணருளென்றே மனது தேறு.''

கண. ஜீவகாருண்யம்
இ. போ. ச.
கிளிநொச்சி.

உ

சிவமயம்



## வடபிராந்திய போக்குவரத்துச்சபை
## தென்பகுதிச் சாலைகள்
## ஒன்றிணைந்து நடாத்தும்

# வாணி விழா

**காலம்:** 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி
ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி

**இடம்:** கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம்

**தலைவர்:** திரு: த. கந்தையா (சாலை முகாமையாளர் கிளிநொச்சி)

கௌரவ விருந்தினர்கள்:

திரு. சி. கனகரத்தினம் அவர்கள் தலைவர், வ. பி. போ. சபை
சமாதான நீதிவான், உ. நீ. அரச. சட்டத்தரணி

திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர், கிளிநொச்சி

திரு. க. சிவசுப்பிரமணியம் அவர்கள்
உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி.

# நிகழ்ச்சி நிரல்

1. சரஸ்வதி பூசை

2. தலைமை உரை

3. வரவேற்புரை: திரு. K. சுகுணபாலயோகன் அவர்கள்
(உதவி சாலை முகாமையாளர், கிளிநொச்சி)

4. மலர் வெளியீடு: திரு. U. சிறீஸ்கந்தராசா அவர்கள்
(ஆளணி முகாமையாளர், வ. பி. போ. சபை)

5. சிறப்புரை: திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர், கிளிநொச்சி)

திரு. க. சிவசுப்பிரமணியம் அவர்கள்
(உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி)

திரு. சி. கனகரத்தினம் அவர்கள்
(தலைவர், வ. பி. போ. சபை)

6. பேச்சு: திரு. K. ஜீவகாருணியம் அவர்கள்
(விடயம்: சக்தி வழிபாடும் பாரதியும்)

7. நன்றியுரை.

## கலை நிகழ்ச்சிகள்

★ நடனம் ★

(இராமநாதபுரம் சென் ரேக் கழகத்தினர்)

இராமநாதபுரம் சென் ரேக் இளைஞர் மன்றம்
பெருமையுடன் அளிக்கும்

## பத்திரமாய் மகன் வருவார்

(முழு நீள தாளலய நகைச்சுவை நாடகம்)

மெல்லிசை:

## ★ முல்லைச் சகோதரிகள் ★

வில்லிசை:

## கலாவினோதன் சின்னமணி குழுவினர்

இசை விருந்து:

## ★ அருணா இசைக் குழு ★

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
வாணி விழா இயக்குனர் குழு
வ. பி. போ. சபை, தென்பகுதி.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின்

கிளிநொச்சிச் சாலையினரால் நடாத்தப்படும்

வாணி விழா சிறப்புற

எமது நல் வாழ்த்துக்கள்

## மோட்டார் உழவு இயந்திர உதிரிப்பாகங்கள்

## எலெக்றிக்கல் பொருட்கள்

## இரும்புச் சமான்கள் போன்றவற்றிற்கும்

## திறமான புகையிலை சுருட்டுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

# வ. இ. தம்பிப்பிள்ளை

## வர்த்தக நிறுவனம்

யாழ்ப்பாணம் - கண்டி வீதி, :: கிளிநொச்சி

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வாணி விழா
சிறப்பாக நடைபெற மனமார வாழ்த்துகிறோம்.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
பலசரக்குச் சாமான்களையும் மலிவாகவும் சரியான நிறையிலும்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

# பிரதீபன் ஸ்ரோர்ஸ்

பாடசாலை வீதி, : : இராமநாதபுரம்.

---

பசளை வகைகள், கிருமிநாசினிகள்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

## ஐயனார் றேடேர்ஸ்

கிளிநொச்சி.

கிளை :

## நெஷனல் றேடேர்ஸ்

முல்லைத்தீவு றோட், பரந்தன்.

---

சகலவிதமான
பலசரக்குப் பொருட்களும்
மலிந்த விலையில் விற்பனை
செய்யும் சிறந்த ஸ்தாபனம்

## நியூ
## நந்தவேலவன் ஸ்ரோர்ஸ்

பஸ் நிலையம், கிளிநொச்சி.

வாணி விழா வெற்றி பெற எமது வாழ்த்துக்கள்
சிறந்த சிற்றுண்டி வகைகள்
உணவு வகைகள்
சுத்தமாகப் பெற்றுக் கொள்ள
சிறந்த இடம்
இன்றே விஜயம் செய்து பாருங்கள்

# லக்கி ஹோட்டல்

பஸ் நிலையம், :: கிளிநொச்சி

---

உங்கள் வாணி விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்
மலிவு விற்பனை
மெசி பேர்க்குசன் உப உதிரிப்பாகங்கள்,
போட் உப உதிரிப்பாகங்கள்
சைக்கில், நீர் இறைக்கும் இயந்திரம் உப உதிரிப்பாகங்கள்,
எலெக்றிக் பொருட்கள் போன்ற பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

# சிற்றி மோட்டோர்ஸ்

417/3, கண்டி வீதி, :: கிளிநொச்சி.

# கலைமகளே காத்தருள்வாய்

மனித வாழ்வுக்கு இன்றியமையாதது கல்வியா, செல்வமா, வீரமா என்று நாம் சிந்திப்போமாயின் கல்வியின் முக்கியத்துவம் நன்கு புரியும். அண்டப்பெருவெளியில் மனிதன் புரியும் மாபெரும் சாதனைகள் சந்திரனில் அவனின் காலடி, ஏன் அதற்கு மப்பாலும் ஏனைய கோள்களை நோக்கிப் புறப்பட்டு விட்டான். இவற்றுக்கான அறிவு வளத்தை அறிவுக்கடலாம் கலைவாணியின் கடாட்சத்தாலன்றோ மனிதன் பெற்றான். செல்வமும் வீரமும் இருப்பவனிடத்தில் கல்வியாம் நல்லறிவு இல்லாதிருக்குமாயின் இத்தகு சாதனைகளை மனித வர்க்கம் எண்ணிப் பார்க்க முடியுமா?

கல்வியின் பெருமைதனை எழுத்துக்களில் வடிக்க முடியாது. 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்றனர் சான்றோர். இதனையே வள்ளுவரும் 'தந்தை மகற் காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்றார்.
கல்வி என்னும் பொக்கிஷத்தை நீரினாலோ நெருப்பினாலோ, காற்றினாலோ ஊழிப்பெரு வெள்ளத்தினாலோ அழித்துவிட முடியாது. அன்னை வாணியின் திருவருளே எமைப் பேசவும் எழுதவும் செய்கிறது.

சாதி மத பேதமின்றி எல்லோராலும் போற்றித் துதிக்கப்பெறும் இத்துணை சக்திவாய்ந்த கல்வித் தெய்வமாம் வாணித்தாய்க்குக் கல்வி நிலையங்களிலும், தொழிற் சாலைகளிலும், வீடுகளிலும், கோவில்களிலும் விழாவெடுக்கப்படுகின்றது. இதனால் சக்தி வழிபாட்டின் மேன்மையையும் வாணித்தாயின் சிறப்பினையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது. எமது மக்கள் மத்தியில் சைவ சமயப் பண்பாட்டினை வளர்க்கவும், சமய வளர்ச்சியைத் தூண்டவும் முடிகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை தென்பகுதிச் சாலையினர் வாணிக்குப் பெரு விழா எடுப்பதனையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவர்களின் நற்பணிக்குக் கலை மகளின் திருவருள் பாலிக்க வாழ்த்துகின்றோம்.

'கல்விக் கதிபதியாம் கலைவாணி
காத்தருள்வாள் எம்மையெல்லாம்'

சு. குணரத்தினம்
விநியோகப் பகுதி
கிளிநொச்சிச்சாலை

வடபிராந்தியப் போக்கு வரத்துச் சபையின்
தென் பகுதிச் சாலைகள் நடாத்தும்

வாணி விழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

V

அன்பளிப்பு

இளிநொச்சி தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி.

# வாணிக்கு ஒரு விழா

சைவசமய மக்கள் எடுக்கும் விழாக்களுள் நவராத்திரி விழா மிகவும் முக்கியமானது. ஒன்பது இரவுகளில் தேவியைப் பூஜை செய்ய வாய்ப்பான காலம் நவராத்திரியாகும். முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவியை வழிபட்டு வீரத்தையும், அடுத்த மூன்று நாட்களும் மகாலட்சுமியை வழிபட்டுச் செல்வத்தையும் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதிதேவியை வழிபட்டு கல்வியையும் பெற்றுக்கொள்வதற்கே இவ்விழா ஏற்பட்டிருக்கலாம். மனிதவாழ்வுக்கு வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் அவசியம் வேண்டற்பாலனவாம். இவ்வாறு ஒன்பது இரவுகளிலும் வழிபாட்டைச் செய்ய முடியாதவர்கள் ஒன்பதாம் நாள் இரவு பெருவிழா எடுப்பது வழக்கம். இதனை சரஸ்வதிபூஜை, ஆயுதபூஜை, வாணி விழா எனப்பல வகையாக அழைப்பர்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் தன்னகத்தே கொண்டு விழங்கும் கருணையுடையவள் வாணி. மனிதனின் வாழ்வு செம்மை நலம் பெற அறிவாகிய ஒளியை அள்ளித் தருபவள் வாணி. வாக்கிற்கு அதிதேவதை வாணி. வாணியின் அருள்இன்றேல் அறிவைப் பெறமுடியாது.

உழவர் கரத்திலும், கவிஞன் உள்ளத்திலும், மாதர் திங்குரற் பாட்டிலும் நின்று அருள்புரிபவள் வாணி. கலைவண்ணமாகத் திகழ்பவள் வாணி.

எத்தொழிலைப் புரிந்தாலும் அத்தொழிலில் கலைவண்ணமாகத் திகழ்பவள் வாணி. இதனாலன்றோ எவ்விடத்திலும் வாணி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த வகையில் வாணிக்கு ஒரு விழா எடுப்பது அவசியமாகத் தென்படுகின்றது. வட பிராந்திய தென்பகுதி போக்குவரத்துச் சாலைகளும், பிராந்திய அலுவலகத்தைச் சார்ந்தோரும் ஒன்று சேர்ந்து வாணிக்கு ஒரு விழா எடுக்கின்றோம்.

மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்பதை நாம் உணர்கின்றோம். அந்தச் சக்தியினால் நாம் இயங்குகின்றோம் என்பதையும் உணர்கின்றோம்.

"எண்ணுவார் நெஞ்சத்தில் நண்ணுவார் ஈசன்"

ந. லோகநாதன்
சாலைப்பரிசோதகர்
கிளிநொச்சி.

# SRI HARANS

**SPARE PARTS & HARDWARE MERCHANTS**

**Kandy Road, :: KILINOCHCHI.**

சகல ரகப் பொருட்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

இன்றே விஜயம் செய்யுங்கள்

உ

# ஸ்ரீ கரன்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.



# வாணி விழா
## ஏன் கொண்டாடப்படுகிறது

ஜெ. தேவபாலன்
விநியோகப் பகுதி T. I·
கிளிநொச்சி.

செய்யும் தொழிலே தெய்வம் என்னும் பொன் மொழிக் கேற்ப தெய்வ சக்தி யோடு தொழில் புரிய வேண்டும் என்ற நோக் கோடும் பொது சன நல்லுறவு வலுப் பெற வேண்டும் என்ற உணர் வோடும் எமது சாலைகளிலே வாணிக்கு விழா எடுக் கப் படுகின்றது. இவ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டும் என்ற நோக்குடன் எமது வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தென் பகுதிச் சாலைகள் சேர்ந்து இவ் விழாவை ஒவ்வொரு வருடமும் முறையே வவுனியா, மன்னார், முல்லைத்தீவுச் சாலை களில் கொண்டாடப்பட்டு வந்தது. இம் முறை இவ் விழாவை எமது கிளிநொச்சிச் சாலையில் கொண்டாடுவது பெருமகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

கல்வி, செல்வம், வீரம் ஆகியன மனித வாழ்க்கையின் முக்குணங்களாகும். இம் மூன்றும் ஒருவருக்கு இயற்கையாய் அமைந்து விட முடியாது. முப்பெரும் தேவிகளின் அருட் சக்தியின் மூலமே அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே தான் உழவர் முதல் உத்தியோகஸ்தர் வரை இவ் விழாவை சிறப்புறக் கொண்டாடு கின்றனர்.

மலைமகள், நிலமகள், கலைமகளாகிய துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய முத் தேவிகள் பால் நோன்பிருந்து அனுட்டிக்கப்படும் வாணி விழா பத்தாம் நாளாகிய விஜயதசமி யோடு முடிவடைகிறது. வீரத்தைத் தரும் சக்தியை துர்க்கை எனவும், செல் வத்தைத் தரும் சக்தியை இலக்குமி எனவும், ஞானத்தைத் தரும் சக்தியை சரஸ்வதி எனவும் இந்துக்கள் வணங்குகின்றனர். முதல் மூன்று நாளும் துர்க்கை வழிபாட்டி லும் அடுத்த மூன்று இரவும் திருமகள் வழிபாட்டிலும் இறுதி மூன்று இரவுகளும் கலைமகள் வழிபாட்டிலும் ஈடுபடுவர். ஒன்பதாம் நாள் இரவு தமது தொழில் செய் வதற்குரிய, ஆயுதங்கள் கருவிகள் நூல்கள் முதலியன வற்றை பூசையில் வைத்து வழிபடுவர். பத்தாவது நாளாகிய விஜயதசமி அன்று இந்துக்கள் தமது தொழில்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பண்ணிய நாளாகக் கருதி வித்தியாரம்பம், ஏர் பூட் டல், புதுக் கணக்குப் பதிதல் ஆகிய தொழில்களை மேற்கொள்ளுவர் இவ்விழா தசரா என்னும் பெயரில் பாரதத்திலும் மைசூரிலும் பிற இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வாணியின் பெயரால் அனுஸ்டிக்கப்படும் வாணி விழாவில் முதல் மூன்று நாட்களும் அனுஸ்டிக்கப்பட வேண்டியவள் ஆயுதத் தலைவி வீரத் திருமகள் துர்க்கா தேவியாவள். எனவே வாணி விழாவில் துர்க்கையின் பங்கு ஒர் சிறந்த அம்சமாகும். எக்கலைக்கும் முதல்வியாய் நிற்பவள் கலைவாணியே. எனவே தான் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விப்பளென்று பாடிப் போந்தார். இதனால்த் தான் கலைவாணியை சகல கலா வல்லி என்பர். உலகம் முழுதாழும் வெண்கொற்றக்குடையோனாயினும், அடிமையாயினும் அவளின்றி அசைய முடியாது. எனவே தான் அவளின்றி அணுவும் அசையாது என்று கூறினால் மிகையாகாது. இதனாலன்றோ பாரதியும் ''பாதங்கள் போற்றுகின்றேன் என்றன் பாவமெல்லாங் கெட்டு ஞான கங்கை நாதமெடப் பொழுதும் என்றன் நாவினிலே பொழிந்திட வேண்டுமெனக் கலைமகளை வேண்டுகிறார்.

ஆகவே சகல கலா வல்லியாகிய வாணிக்கு விழா எடுப்பதில் எமது கிளிநொச்சிச் சாலையினர் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள்.

577, இராமநாதபுரம்
கிளிநொச்சி.
*16 - 10 - 1982*

ஜெ. தேவபாலன்

சிறந்த அச்சுவேலைகளுக்கு

# அம்பிகா அச்சகம்

குரும்பசிட்டி, :: தெல்லிப்பளை.

உங்கள் வாணி விழாவுக்கு எங்கள் நல் வாழ்த்துக்கள்

சகல விதமான

எலெக்ட்ரிக்கல் பொருட்கள், இரும்புச் சாமான்கள்

போன்ற பொருட்களை மலிவாகவும் தரமாகவும்

பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம் இன்றே

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

# பஞ்சு

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

*With the Best Compliments*

*from*

# PENINSULA GROUP OF COMPANIES

Transporters, Importers & Exporters

**25, STANLEY ROAD, JAFFNA.**

---

அன்பளிப்பு

உங்கள் வாணி விழாவுக்கு எங்கள் வாழ்த்துக்கள்

**பிரகாஸ் சலூன்**

பஸ் நிலையம், :: கிளிநொச்சி.

---

அன்பளிப்பு

**புதிய தங்க மாளிகை**

கிளிநொச்சி.

# கலையவளாம் வாணிபுகழ்

"மண்கண்ட வெண்குடைக் கீழாக
 மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய்
 படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
 விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
 சகல கலாவல்லியே"

கலைவாணியாம் சரஸ்வதியின் மாபெரும் விழாவை இம்முறை எமது தென்பகுதிச் சாலைகளில் ஒன்றான கிளிநொச்சிச் சாலையில் கொண்டாடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்து வாணியின் புகழினை உங்கள் முன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

"ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விப்ப வள்"

என்று பாடிப் போற்றுகின்றவர்கள் பலபேருண்டு. அறுபத்துநான்கு கலைகளையும் அள்ளித் தருகின்ற அன்னையாம் வாணிக்கு நாம் விழா எடுக்கின்றோம். உலகிலே எல்லாச் செல்வங்களையும்விடக் கல்விச் செல்வமே பெறுமதிமிக்கதும் விலைக்கு வாங்க முடியாததுமாகும். இதற்குத் தலைவியாய் விளங்குபவள்தான் அன்னை கலைவாணி.

புரட்டாதி மாதத்தில் முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகியோருக்கு விழா எடுக்கப்படுகின்றது. மக்களிடையே கல்வியா, செல்வமா, வீரமா எது பெரியது என்ற எண்ணந் தோன்றுகின்றது. இதன் பொருட்டே இம்மூன்று பெண் தெய்வங்களுக்கும் முற்காலம் தொட்டுப் பெரியோர்கள் விழா எடுத்து வந்துள்ளனர். ஆனால் அன்னை கலைவாணியின் அருள் இல்லையாயின் மக்கள் அறிவு வளரவே முடியாது. இதனை ஔவையார் அழகாகச் சொல்கின்றார்.

"கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
என்று உற்ற கலைமடத்தை ஓதுகின்றாள்
மெத்த வெறும் பந்தயம் கூறவேண்டாம்
எறும்பும் தன் கையால் எண் சாண்"

எனவே நாம் கற்பதற்கு ஏதுவாகவும், உறுதுணையாகவும் உதவி அளிப்பவள் கலைமகளே.

ஒரு தாயானவள் தன் மகன் சான்றோன் என்று கேள்விப்பட்டால் அவளுக்கு அவனை ஈன்ற பொழுதில் இருந்த சந்தோஷத்தை விடப் பல மடங்கு சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என்று வள்ளுவர் பெருந்தகை கூறுகின்றார். இதற்கெல்லாம் காரணகர்த்தா அன்னை கலைவாணியே. அப்படிப்பட்ட அன்னை கலைவாணி அவளின் புகழை நாம் பாட என்ன தவம் செய்தோம்.

"கல்விக்கு உரித்து கலை ஞானம்
கனிந்து தருபவள் கலாவல்லி
நல்ல விருந்தாக நமக்களிக்கும்
கிளிநொச்சிச் சாலை நடத்துனர்
சபை நீடுழி வாழி, வாழியவே"

'மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்'

சு. தவகுகதாசலிங்கம்.
கணக்காளர் காரியாலயம்
இ. போ. ச.
வவுனியா.

★


அன்பளிப்பு

குணம் மோட்டோர்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

அன்பளிப்பு

நாதன் கபே

பஸ் நிலையம், :: கிளிநொச்சி.

*With the best Compliments*
*from*

**RAJA COMMERCIAL INSTITUTE**

Depot Road, Anandapuram
KILINOCHCHI,

CLASSES:.
MORNING 8-30 TO 11.30
(Nursery)
EVENING:- 10, 9, 8, 7, 6, 5
(all Subjects)
NIGHT:. ONLY WORKERS
(English and Sinhala)

உங்களின் கைக் கடிகாரங்கள்
மேசை அலாம், சுவர் மணிக்கூடுகள்
றேடியோக்கள்
சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ள
விஜயம் செய்யுங்கள்

**அம்பி வாச் வேக்ஸ்**

கண்டி வீதி,
கிளிநொச்சி.

அன்பளிப்பு

**சிவபாக்கிய ஸ்ரோர்ஸ்**

கிளிநொச்சி.

அன்பளிப்பு

சகலவிதமான சிற்றுண்டி வகைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்.

**மணியம் கபே**

கரடிப்போக்குச் சந்தி, :: கிளிநொச்சி.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின்
கிளிநொச்சிச் சாலையினரால் நடாத்தப்படும்
வாணி விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

# கஜநிதி ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, -- கிளிநொச்சி.

T. Phone: 298

# M. P. VEERAVAGU & Co.

114, JAFFNA ROAD,
KILINOCHCHI.

சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்,
மற்றும் ஏனைய பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

# M. P. வீரவாகு அன் கோ.

114, யாழ்ப்பாணம் வீதி,
கிளிநொச்சி.

தொலைபேசி: 298

# நன்றி சொல்ல வேண்டும்
# இவர்களுக்கு

★ எமது இச்சஞ்சிகையை வெளியிடப் பல வழிகளிலும் ஆலோசனை வழங்கிய எமது விழாத் தலைவரும், பெருமதிப்புக்குரிய சாலை முகாமையாளருமான திரு. த. கந்தையா அவர்களுக்கும், மற்றும் எமது சாலை உத்தியோகஸ்தர்கள், தொழிலாள நண்பர்கள் அனைவருக்கும்.

★ எமது ஆக்கமுயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆசியுரைகள் வழங்கிய வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் அவர்களுக்கும் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களுக்கும், எமது உதவி அரசாங்க அதிபர் திரு. K. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், மற்றும் ஆசியுரைகள் தந்து இம்மலரைச் சிறப்பித்த அனைவருக்கும்.

★ நாம் இம் மலரை வெளியிடுவதற்குப் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்யும் முகமாகவும் எமது விழா சிறப்புற நடைபெற வேண்டும் என்ற எண்ணத்துடனும் எமக்கு விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் இவற்றினைச் சேகரிக்க உதவிய அனைவருக்கும்.

★ இம்மலரை வெளியிடுவதற்கு எமது குறுகிய கால வேண்டுகோளை ஏற்று ஆக்கங்களைத் தந்த எமது சாலை ஊழியர்களுக்கும் மற்றும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு சாலையினர் அனைவருக்கும் அவற்றைக் குறுகிய கால எல்லைக்குள் அச்சிட்டுத் தந்த அம்பிகா அச்சகத்தினருக்கும்.

★ இந்நாட்டு மக்களுக்குச் சிறந்த சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் எமது போக்குவரத்துச் சபையின் தென்பகுதி ஊழியர்கள் அனைவருக்கும் இவ்விழாவை திறம்பட நடாத்த வழிவகுத்த இந்த இயக்குனர் சபைக்கும் குறைகளைக் களைந்து நிறைகளை ஏற்று இச்சஞ்சிகையினைப் பெற்று எம்மை ஊக்குவிப்பவர்கள் அனைவருக்கும்.

எமது நன்றி உரித்தாகட்டும்

இங்ஙனம்

பத்திரிகைக் குழு

கிளிநொச்சிச்சாலை.

கிளிநொச்சி மத்தியில் சிறந்த சைவ போசனசாலை

★ சுத்தமான
★ சுவையான
★ ருசிகரமான உணவுக்கு

இன்றே ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

# சித்தி விலாஸ்
# சைவ ஹோட்டல்

## கண்டி வீதி, :: கிளிநொச்சி

வாணி விழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்கள்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
ஆடம்பரப் பொருட்கள்
ஸ்ரேசனெறிப் பொருட்கள்

இவையாவும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் சகாய விலையில்

பெற்றுக் கொள்ளலாம்

## அருணா றேடேர்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி

விவசாயிகளே

உங்கள் உழவு இயந்திரங்கள்
திருத்தப்பட வேண்டுமா?
புதிய டிராக்ரர் பெட்டிகள்
செய்ய வேண்டுமா?

நாடுங்கள்

## செல்லப்பா கராஜ்

கண்டி வீதி,
கிளிநொச்சி.

அங்கீகரிக்கப்பட்ட பாட்டா
பாதணிகள் விற்பனையாளர்கள்
மற்றும்
விளையாட்டுப்பொருட்கள்,
ஆடம்பரப்பொருட்கள்
( Fancy Goods )
எங்களிடம் மலிவாகப்
பெற்றுக் கொள்ளலாம்

குளோப் றேடர்ஸ்
கண்டி வீதி,
கிளிநொச்சி.

உங்கள் விழா சிறப்புற
எமது நல்லாசிகள்

தரமான புகைப் படங்களுக்கு
நாடவேண்டிய இடம்

கமலா ஸ்ருடியோ
கிளிநொச்சி.
ஸ்தாபிதம் 1954

வாணி விழா சிறப்பாக நடக்க
எமது உள்ளங் கனிந்த வாழ்த்துக்கள்

சுவீப் ஏஜென்ட்
K. கந்தையா
பஸ் நிலையம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சி
முல்லைத்தீவு

வாணி விழாவிற்கு எம் வாழ்த்துக்கள்
பலசரக்குச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீ சக்தி றேடேர்ஸ்
கண்டி வீதி, கிளிநொச்சி.

வாணி விழா சிறப்புற எமது நல்லாசிகள்

பசளை, கிருமி நாசினி மற்றும்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களை
கொள்வனவு விற்பனவு செய்பவர்கள்

()
()

# A. K. R. அரிசி ஆலை

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

☎ 264, 333

---

இ. போ. சபையின் கிளிநொச்சிச் சாலையினரால்
நடாத்தப்படும்
வாணி விழா சிறப்புற வாழ்துகிறோம்.
ஹெண்டா மோட்டார் சைக்கிள்கள், உதிரிப்பாகங்களுக்கு
அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.
மோட்டார் ஸ்பிறேயர், நீர் இறைக்கும் இயந்திரம், உதிரிப்பாகங்கள்
விவசாய இரசாயன பொருட்கள் போன்றவற்றைக் குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

# சிவன் மோட்டோ ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, :: பரந்தன்.

தேநீர் சிற்றுண்டி வகைகளுக்கும்.

குளிர்பான வகைகளுக்கும்.

பணியாளர்களின் இனிய உபசரிப்புக்கும்.

சிறந்த ஸ்தாபனம்

# சிவம் ரீ றூம்

பஸ் நிலையம், :: கிளிநொச்சி.

---

உங்கள் வாணி விழாவுக்கு எங்கள் வாழ்த்துக்கள்

சிறந்தரக

தேநீர்

சிற்றுண்டி வகைகளையும்

குளிர்பான வகைகளையும்

சுத்தமாகவும், ருசிகரமாகவும், சிறந்த உபசரிப்புடனும்
பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

# கிறீன்லன்ட் கூல் பார்

பஸ் நிலையம், :: கிளிநொச்சி.

இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் தென் பகுதியினரால்
எடுக்கப்படும் வாணி விழாவுக்கு
எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

பாவனையாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

தங்களுக்குத் தேவையான

- O நுகர்ச்சிப் பொருட்கள்
- O புடவை வகைகள்
- O கனரகப் பொருட்கள்
- O கால்நடை உணவு வகைகள்
- O இரும்பு வகைகள்
- O பசளை, கிருமிநாசினி வகைகள் போன்ற பொருட்களுக்கும்
- O வாகனப் போக்கு வரத்துச் சேவைகளுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

V

உங்கள் தேவையே எங்கள் சேவை

கரைச்சி தெற்குப்

# ப. நோ. கூ. சங்கம்

கிளிநொச்சி.

☎ 248

தந்தி:- கோப் சொப்

# ★கமலினி றேடேர்ஸ்★

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

சகல விதமான

- O உரவகைகள்
- O கிருமி நாசினிகள்
- O களை கொல்லிகள்
- O தெளி கருவிகள், உதிரிப்பாகங்கள்
- O ஒடு சிமேந்த் மற்றும்
- O இலங்கை உரக் கூட்டுத்தாபனம்
- O எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம்
- O ஆகியவற்றின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்
- O உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள்

இன்றே விஜயம் செய்யுங்கள்.


# கமலினி றேடேர்ஸ்

கண்டி வீதி, :: கிளிநொச்சி.

22 வருட காலமாக கிளிநொச்சி மக்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்துவரும்
எமது ஸ்தாபனத்தின்
தரமான தயாரிப்புகள்:-

2'' 'யூனியன்' விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்

இறக்குமதி செய்யப்பட்ட "வில்லியர்ஸ்" இயந்திரம்
இணைக்கப்பட்டுள்ளது.
(ஒரு வருட கால உத்தரவாதம்)

'யூனியன்' மேடைத் தராசு 250 கிலோ கிறும்

'யூனியன்' மேசைத் தராசு 15 கிலோ கிறும்

மற்றும்

- ★ விவசாய தெளிகருவிகள்
- ★ விவசாய மருந்து வகைகள்
- ★ கட்டிடப் பொருட்கள்
- ★ பெயின்ற் வகைகள்
- ★ கனரகப் பொருட்கள் யாவற்றிற்கும்

கொள்வனவு செய்வதற்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

# சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட்

கண்டி வீதி, : கிளிநொச்சி.

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி.